செய்தி வெளியீடு எண்:524 நாள்:11.11.2016

# தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம்

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் ஏற்கனவே பெற்றுள்ள Internet Service Provider உரிமத்தினை பயன்படுத்தி, "இல்லந்தோறும் இணையம்" என்ற கொள்கையின் அடிப்படையில், அதிவேக அகண்ட இண்டர்நெட் சேவைகளை முதல் கட்டமாக 01.03.2016 முதல் தமிழகத்தின் மாவட்ட தலைநகரங்களில் வழங்கி வருகிறது.

இரண்டாம் கட்டமாக, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், "இல்லந்தோறும் இணையம்" திட்டத்தினை தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து நகராட்சி பகுதிகளிலும் விரிவுபடுத்துவதற்காக விருப்பம் கோரும் விண்ணப்பங்களை (Expression of Interest Document) இந்நிறுவனத்தின் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து 15.11.2016–க்குள் விண்ணப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இத்திட்டத்தில் சேர்ந்து இணைய சேவை வழங்குவதற்காக விருப்பம் தெரிவித்து இதுவரை 7,317 நபர்கள் விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்துள்ளனர். இத்திட்டத்தில் சேர்வதற்கு அதிக அளவில் வரவேற்பு இருப்பதாலும், கால அவகாசத்தை நீட்டிப்பு செய்து தருமாறு விருப்பமுள்ளவர்களிடமிருந்து கோரிக்கைகள் பெறப்பட்டுள்ளதாலும், விண்ணப்பங்களை பூர்த்தி செய்து அனுப்ப வேண்டிய கடைசி நாள் 30.11.2016 என நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே, "இல்லந்தோறும் இணையம்" திட்டத்தில் இணைந்து தமிழகத்தில் உள்ள அனைத்து மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களுக்கு இணைய சேவை வழங்க விரும்புவோர் 30.11.2016 வரை விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

இத்திட்டம் தொடர்பான அனைத்து தகவல்களும் கேள்வி – பதிலாக இந்நிறுவனத்தின் இணையதளத்தில் (www.tactv.in) "அடிக்கடி கேட்கப்படும் வினாக்கள்" (Frequently Asked Questions) பகுதியில் 14.11.2016 முதல் பார்த்து தெரிந்துகொள்ளலாம். அதற்கு மேலும் ஏதாவது சந்தேகம் இருந்தால் இந்நிறுவனத்தின் கட்டணமில்லா தொலைபேசி எண் 1800 425 2911–ஐ தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

மேலாண்மை இயக்குநர்

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை**